

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

(பதினான்காவது சட்டமன்றப் பேரவை)

2011 - 2012 - ஆம் ஆண்டுக்கான
பொதுத் துறைக்குரிய
41, 42, 43, 44 மற்றும் 50 முதல் 60
வரையிலான மானியக் கோரிக்கைகள்

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை 600 009


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
பதினான்காவது பேரவை
(2011–2016)

பொதுக்கணக்குக்குழு
(2011–2012)

பொருளடக்கம்

வரிசை எண்	அறிக்கை எண்	துறை	தணிக்கை அறிக்கை ஆண்டு
1.	41	நிதி (சிவில்)	1994–1995, 1996–1997, 1997–1998, 1998–1999, 1999–2000, 2000–2001, 2001–2002
2.	42	வணிகவரி மற்றும் பதிவு (விற்பனை வரி) (வருவாய் வரவினங்கள்)	1997–1998
3.	43		1998–1999
4.	44		1999–2000
5.	50	உள்துறை (வருவாய் – வரவுகள் – வரி அல்லாதவை)	1999–2000, 2000–2001
6.	51	வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு (முத்திரைத்தாள் தீர்வை மற்றும் பத்திரப்பதிவு கட்டணங்கள்) (வருவாய் வரவினங்கள்)	2003–2004
7.	52	வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித்துறை (சிவில்)	2002–2003
8.	53	நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (சிவில்)	1997–1998
9.	54		1998–1999
10.	55	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (சிவில்)	1997–1998
11.	56		1998–1999
12.	57	வருவாய் (சிவில்)	1997–1998
13.	58	சமூக நலன் மற்றும் சத்துணவுத்திட்டம் (சிவில்)	1998–1999
14.	59	கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம் (சிவில்)	2003–2004
15.	60	வேளாண்மை (சிவில்)	2001–2002, 2002–2003, 2003–2004, 2004–2005

(பேரவைக்கு அளிக்கப்பட்ட நாள் : 7–5–2012)


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பொதுக் கணக்குக் குழு

(2011–2012)

(பதினான்காவது பேரவை)

நாற்பத்து ஒன்றாவது அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள்: 7/5/12

சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பொதுக் கணக்குக் குழு

(2011–2012)

(பதினான்காவது பேரவை)

நாற்பத்து ஒன்றாவது அறிக்கை



இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1994–95, 1996–97, 1997–98, 1998–99, 1999–2000, 2000–2001 மற்றும் 2001–2002 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கையில் (வருவாய் வரவினங்கள்– வரியில்லா வரவு) உள்ள நிதித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பொருளடக்கம்

பத்தி எண். (1)	பொருள் (2)	பக்கம் (3)
	2011–12ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் அமைப்பு ...	iii
	முன்னுரை ...	v

அறிக்கை

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1994–95, 1996–97, 1997–98, 1998–99, 1999–2000, 2000–2001 மற்றும் 2001–2002ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கையில் (வருவாய் வரவினங்கள்–வரியில்லா வரவு) உள்ள நிதித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை :-

நிதித்துறை

1.	மாநில பரிசுச் சீட்டுகளிலிருந்து கிடைத்த வரவுகள் பற்றிய ஆய்வறிக்கை	1–2
2.	மத்திய அரசின் வழிகாட்டிக் குறிப்புகளை பின்பற்றத் தவறியது	2–3
3.	பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்வதற்காக, தனியுரிமை பெற்ற முகவர்களை நியமித்தல்	3–5
4.	பொது மக்களுக்கு பரிசுத் தொகை அளித்தல், பரிசுச் சீட்டுகளின் மொத்த விற்பனைத் தொகையில் 50 சதவீதம் அளிக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டும் குறைவாக பணம் அளித்தது	5–6
5.	பரிசுத் தொகையிலிருந்து பணத்தை குறைத்த முறையற்ற செயல்	6–7
6.	பொது மக்களுக்கு பரிசுத் தொகை வழங்குவதில் நிலுவை ஏற்பட்டமை	7–8
7.	முகவருக்கு அளவிற்கு அதிகமாக நிதி உதவி அளிக்கப்பட்டமை	8–9
8.	விற்கப்படாத பரிசுச் சீட்டுகளுக்கு 'போனஸ்' தொகை வழங்கப்பட்டமை	9
9.	நிதிகளை மாற்றுவதில் குறைவு ஏற்பட்டமை	10–11
10.	தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் நல நிதிக்கு நிதியை குறைவாக மாற்றியது	11
11.	முகவர்கள் வழங்கிய பரிசுத் தொகையை கணக்கில் காட்டத் தவறியது	11–12
12.	பொது	12

இணைப்பு

பரிந்துரைகளின் சுருக்கம்	13–14


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

2011–2012ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் அமைப்பு

(10–6–2011ஆம் நாளன்று அமைக்கப் பெற்றது)

தலைவர்

1. திரு ச. இராமச்சந்திரன்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்
நிதி அமைச்சர் (அலுவல் காரணமாக)

3. திரு. பி.ஜி. நாராயணன்
தலைவர், மதிப்பீட்டுக் குழு (அலுவல் காரணமாக)

4. திரு. வி. சோமசுந்தரம்
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)

5. திரு. கே.பி. அன்பழகன்

*6. திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்

7. திரு. பி.வி. கதிரவன்

8. திரு. கடம்பூர் ராஜு

9. திரு. வி.பி. கலைராஜன்

10. வெற்றிடம்

11. திரு. ம. குணசேகரன்

12. திரு. ஒ. கே. சின்னராஜ்

13. முனைவர் கோவி. செழியன்

14. திரு. இரா. துரைக்கண்ணு

15. திரு. க. பாண்டியராஜன்

16. திரு. கு.வ. மார்க்கண்டேயன்

17. திரு. ஆர். ராமமூர்த்தி

18. திருமதி ஆர்.ராஜலெட்சுமி

19. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திருமதி கோ.காயத்ரி	..	இணைச் செயலாளர்
செல்வி எஸ். பிலோமினா	..	துணைச் செயலாளர்
திரு. இராம.சோ. கிரிதரன்	..	சார்புச் செயலாளர்

* 11.12.2011 வரை


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முன்னுரை

1. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1994–95, 1996–97, 1997–98, 1998–99, 1999–2000, 2000–2001 மற்றும் 2001–2002ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கையின் (வருவாய் வரவினங்கள்–வரியில்லா வரவு) உள்ள நிதித் துறை குறித்த பத்திகள் மீதான 2011–2012 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்து ஒன்றாவது அறிக்கையை குழு அதிகாரமளித்துள்ளவாறு பொதுக் கணக்குக் குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1994–95, 1996–97, 1997–98, 1998–99, 1999–2000, 2000–2001 மற்றும் 2001–2002 ஆகிய ஆண்டுகளுக்கான (வருவாய் வரவினங்கள்) அறிக்கைகள் முறையே 20.7.1996, 28.5.1998, 20.4.1999, 18.5.2000, 6.9.2001, 10.5.2002 மற்றும் 10.5.2003 ஆகிய நாட்களில் பேரவை முன் வைக்கப் பெற்றன.

3. மேற்கண்ட துறை தொடர்பான முக்கியப் பத்திகள் சம்பந்தமாக 16.11.2009ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தில் அத்துறையின் அரசுச் செயலாளரை குழு விசாரணை செய்தது.

4. குழுவின் பணிகளில் பெரிதும் உதவிய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளர், மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் (சிவில் தணிக்கை) நிதித் துறை துணைச் செயலாளர் ஆகியோருக்கு இக்குழு பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, இப்பணியில் ஒத்துழைப்பு நல்கிய நிதித் துறை செயலாளருக்கு குழு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

5. துறை அளித்துள்ள மூலக் குறிப்புகள் மற்றும் சாட்சியத்தின் போது அளித்த விவரங்கள், விளக்கங்கள் ஆகியவற்றை இவ்வறிக்கையினை இறுதி செய்யும் போது குழு கருத்தில் கொண்டது.

6. 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் நாளன்று நடைபெற்ற தனது கூட்டத்தில் குழு இவ்வறிக்கைக்கு ஒப்புதல் அளித்தது.

சென்னை 600 009.
22, நவம்பர், 2011
கார்த்திகை, 6
திருவள்ளுவர் ஆண்டு–2042.

ச. இராமச்சந்திரன்,
தலைவர்,
பொதுக் கணக்குக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1994–95, 1996–97, 1997–98, 1998–99, 1999–2000, 2000–2001 மற்றும் 2001–2002 ஆகிய ஆண்டுகளுக்கான அறிக்கையில் (வருவாய் வரவினங்கள் – வரியில்லா வரவு) உள்ள நிதித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை

நிதித் துறை

(அ) துறை அளித்த விளக்கக் குறிப்புகளின் அடிப்படையில் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1994–1995, 1996–1997, 1997–1998, 1998–1999, 1999–2000, 2000–2001 மற்றும் 2001–2002 ஆகிய ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் உள்ள பத்தி எண் 1.2–னை மேற்கொண்டும் பரிசீலிக்கத் தேவையில்லை என குழு முடிவு செய்கிறது.

(ஆ) துறை அளித்த விளக்கக் குறிப்புகளின் அடிப்படையில் இந்தியத் தணிக்கைத் தறைத் தலைவரின் 2000–2001 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் உள்ள கீழ்காணும் பத்திகளைப் பரிசீலிக்கத் தேவையில்லையென குழு முடிவு செய்கிறது.

பத்தி எண்கள் 9.5.8 (b), 9.5.9, 9.5.12 (a), (b) மற்றும் (c), 9.5.13 மற்றும் 9.5.14.

1. மாநில பரிசுச் சீட்டுகளிலிருந்து கிடைத்த வரவுகள் பற்றிய ஆய்வறிக்கை (2000–2001 ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையின் பத்திஎண் 9.5.)

1.1. நலத் திட்டங்களுக்கான நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காக, பரிசுச் சீட்டுகள் திட்டத்தை நடத்துவதற்கு, மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு அனுமதியளித்தது என்றும், அதற்கிணங்க, தமிழ்நாடு அரசு, 1968 ஜூலையில் பரிசுச் சீட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியது என்றும், இத்திட்டம் 15–9–1975 ஆம் நாள் வரையில் செயலில் இருந்தது என்றும், 1976 ஆகஸ்ட் திங்களில் இத்திட்டத்திற்கு புத்துயிரளிக்கப்பட்டது என்றும், தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு பரிசுச் சீட்டு விதிகள், அரசாணைகள்மூலம் பிறப்பிக்கப்பட்ட நிருவாக உத்தரவுகளின் அடிப்படையிலேயே இயற்றப்பட்டதாகவும், அந்த விதிகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டமன்றத்தில் ஒருபோதும் அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றும் குழு அறிகிறது.

1994 ஏப்ரலில், இந்திய உச்ச நீதிமன்றம், அரசு ஒன்றினால் நடத்தப்படுகிற பரிசுச் சீட்டு திட்டத்திற்கான இன்றியமையாத சில தகுதிகளை வரையறுத்தது. ஏனையவற்றுக்கிடையே அவற்றில் பின்வருபவை அடங்கியிருந்தன.

(i) பரிசுத் தொகை எவ்வளவாக இருப்பினும் அதனைக் கருத்தில் கொள்ளாமல், பரிசைவெல்கிற பரிசுச் சீட்டுகளைத் தெரிவு செய்வதற்கான குலுக்கல்களை, மாநில அரசே நடத்த வேண்டும்; மற்றும்

(ii) ஏதேனும் பரிசுத் தொகை கோரப்படாவிட்டால், அல்லது வேறு வகையில் பரிசுமூலம் வழங்கப்படாவிட்டால், அத்தொகை மாநில அரசிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டு, மாநில அரசின் உடைமையாக்கப்பட வேண்டும்.

உச்ச நீதிமன்றக் கட்டளையின் ஒரு தொடர்ச்சியாக, 1998 ஆம் ஆண்டு லாட்டரிச் சீட்டுகள் (முறைப்படுத்தல்) சட்டத்தை, 1998 ஜூலையில், மத்திய அரசு இயற்றியது. பரிசுச் சீட்டு திட்டங்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதை அது குறிப்பிடுகிறது. 1984 ஜூனில் மத்திய அரசு பிறப்பித்த வழிகாட்டிக் குறிப்புகள், மாநில அரசுகள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை வகுத்துள்ளன. மாநிலம் சட்டமன்றத்தின் ஒப்புதலுடன், தனி விதிகள், மாநில அரசால் வகுக்கப்பட வேண்டும் என்பதற்கும் பரிசுச் சீட்டுக்கள் சட்டம் வகை செய்கிறது. தமிழ்நாடு அரசு, அத்தகைய விதிகளை வகுக்கின்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

நிதித் துறை அரசு செயலரின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின்கீழ் உள்ள தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் ஆணையாளர், தமிழ்நாட்டில், பரிசுச் சீட்டுகள் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்.

தமிழ்நாட்டில் மாநில பரிசுச் சீட்டுகள் திட்டத்தின் செயல்பாடு குறித்த ஆய்வு ஒன்று, 2001 பிப்ரவரிக்கும், மார்ச்சுக்கும் இடைப்பட்ட காலஅளவில் நடத்தப்பட்டது. தமிழ்நாடு பரிசுச் சீட்டுக்கள் ஆணையாளர் அலுவலகத்திலுள்ள, 1996–97 முதல் 2000–2001 வரையிலான காலஅளவிற்குரிய (2000 டிசம்பர் வரை) பதிவுருக்கள், சோதனை முறையில் சரிபார்க்கப்பட்டன. சோதனை முறையில் சரிபார்க்கப்பட்டு அவற்றின் முடிவுகள், அடுத்து வருகிற பத்திகளில் அளிக்கப்பட்டுள்ளன.

2. மத்திய அரசின் வழிகாட்டிக் குறிப்புகளை பின்பற்றத் தவறியது (கு.அ.பத்தி எண் 9.5.5.)

2.1 அரசு நடத்துகிற பரிசுச் சீட்டுகள், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஏழாம் விவர அட்டவணையிலுள்ள மத்திய அரசுப்பட்டியலில் 40 ஆம் இனத்தின்கீழ் வருகிறது என்றும், 1998 ஆம் ஆண்டு பரிசுச் சீட்டுகள் (முறைப்படுத்தல்) சட்டத்தின் 10 ஆம் பிரிவு, பரிசுச் சீட்டுகள் திட்டத்தை நடத்துவது தொடர்பாக, மத்திய அரசு வெளியிட்ட வழிகாட்டிக் குறிப்புகளை, மாநில அரசுகள் பின்பற்ற வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கியுள்ளது என்றும் குழு அறிகிறது.

1984 ஆம் ஆண்டில் மத்திய அரசு வழங்கிய வழிகாட்டிக் குறிப்புகளில் பின்வருபவை அடங்கியுள்ளன:–

- பரிசுச் சீட்டு ஒன்றுக்கான உயரளவு விலை
- முதல் பரிசு குறித்த உச்சவரம்பு
- இரண்டு குலுக்கல்களுக்கு இடையே விடப்பட வேண்டிய குறைந்த அளவு இடைவெளிகள்
- பரிசுத் தொகையின் குறைந்த அளவு சதவீதம்
- அரசுக்கும் சேர வேண்டிய நிகர ஆதாயத்தின் குறைந்த அளவு சதவீதம்

துறையால் நடத்தப்பட்ட பரிசுச் சீட்டு திட்டங்கள், மத்திய அரசு வழங்கிய கட்டளைகளிலிருந்து / வழிகாட்டிக் குறிப்புகளிலிருந்து மாறுபட்டுள்ளன. அதுபற்றிய விவரம் வருமாறு:–

பரிசுச் சீட்டுகள் முறைப்படுத்தல் சட்டத்திற்கு இணங்க மத்திய அரசின் வழிகாட்டிக் குறிப்புகள்	தமிழ்நாட்டில் தற்போது செயலிலுள்ள நடைமுறை
ஒரு வாரத்திற்குக் குறைவான கால இடைவெளியுடன் கூடிய குலுக்கல்கள் கொண்ட பரிசுச் சீட்டுகள் திட்டத்தை நடத்தக்கூடாது.	தினக் குலுக்கல் முறைத் திட்டம் நடத்தப்படுகின்றன.
வாராந்திர பரிசுச் சீட்டுகளுக்கு, பரிசுச் சீட்டு ஒன்றுக்கான அதிக அளவு விலை 1 ரூபாயாக இருக்கலாம். பம்பர் (சிறப்பு) குலுக்கல்களைப் பொறுத்தவரையில், பரிசுச் சீட்டின் விலை 3 ரூபாயாக இருக்கலாம்.	பரிசுச் சீட்டுகளின் விலையானது 2 ரூபாயிலிருந்து 50ரூபாய் வரை வேறுபடுகின்றன.
முதல் பரிசுக்கான உச்சவரம்பு வாராந்திர குலுக்கல் : ரூ. 1 இலட்சம் பம்பர்(சிறப்பு) குலுக்கல்: ரூ. 25 இலட்சம்	வாராந்திர குலுக்கல்களைப் பொறுத்த வரையில், வழங்கப்படுகிற முதல் பரிசுத் தொகை 5 இலட்சம் ரூபாயிலிருந்து 7 இலட்சம் ரூபாய் வரையில் வேறுபடுகின்றன. பம்பர்(சிறப்பு) குலுக்கல்களைப் பொறுத்தவரையில், பரிசுத் தொகை7 கோடி ரூபாய் வரையில் உள்ளது.

வழங்கப்படுகிற மொத்த பரிசுத் தொகை, அச்சிடப்பட்ட பரிசுச் சீட்டுகளின் மொத்த மதிப்பில் 50 சதவீதத்திற்குக் குறைவாக இருக்கக்கூடாது.	இது 41 சதவீதத்திலிருந்து 46 சதவீதம் வரை வேறுபடுகிறது. (துறை, அறிவிக்கப்பட்ட முதல் மற்றும் இரண்டாம் பரிசுத் தொகையிலிருந்து 10 சதவீதத் தொகை பிடித்தம் செய்துகொள்கிறது)

இதுபற்றி சுட்டிக்காட்டியபோது, மத்திய அரசின் வழிகாட்டிக் குறிப்புகளுக்கு சட்டப்படியான ஆதரவு ஏதுமில்லை என்று அரசு பதிலளித்தது (2001 ஜூலை). ஆனால், மாநில அரசின் நிருவாக உத்தரவுகள், மத்திய அரசு வெளியிட்ட வழிகாட்டிக் குறிப்புகளைப் புறக்கணிக்கின்றன. 1998ஆம் ஆண்டு லாட்டரிச் சீட்டுகள் முறைப்படுத்தல் சட்டத்தின் 10 ஆம் பிரிவு, மத்திய அரசு வழங்கிய வழிகாட்டிக் குறிப்புகளை, மாநில அரசுகள் பின்பற்ற வேண்டியதைக் கட்டாயமாக்கியுள்ளதாலும், முன்னர் 1984 ஆம் ஆண்டில் வெளியிட்ட வழிகாட்டிக் குறிப்புகளை, மத்திய அரசு திரும்பப் பெறாததாலும், இந்த பதில், ஏற்கத்தக்கதாக இல்லை.

2.2. துறை, அதன் விளக்கக் குறிப்புகளில், மேற்சொன்ன தணிக்கைக் கருத்துரைக்கு, எவ்வித பதிலையும் அளிக்கவில்லை.

2.3. மத்திய அரசு வழிகாட்டிக் குறிப்புகளை வெளியிடுவதற்கு முன்னரே, தமிழ்நாடு அரசு, இந்த லாட்டரிச் சீட்டு திட்டங்களைத் தொடங்கிவிட்டது என்றும், இது பல ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வந்தது என்றும், மத்திய அரசின் வழிகாட்டிக் குறிப்புகளுக்கு, சட்டப்படியான ஆதரவு இல்லை என்பதால், அதைச் சட்டப்படியானதாக்க கருத இயலாது என்று தமிழ்நாடு அரசு கருதியதால், மாநில அரசு வகுத்தவழிகாட்டிக் குறிப்புகளை, தமிழ்நாடு அரசு, தொடர்ந்து பின்பற்றியது என்றும், தமிழ்நாடு அரசு, பரிசுச் சீட்டு திட்டத்தை தொடங்கிய பின்னரே, மத்திய அரசு, 1998 ஆம் ஆண்டு லாட்டரிச் சீட்டு (முறைப்படுத்தல்) சட்டத்தை இயற்றியது என்றும் நேரடிபாக விளக்கம் அளித்தபோது, அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்தார்.

பரிசுச் சீட்டுகள் இயக்ககம் தற்போது நீக்கப்பட்டுவிட்டது என்றும் இந்தப் பொருண்மை தேசிய சிறுசேமிப்புத் துறையின் பொருண்மையாக சேர்க்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

2.4. இந்தப் பத்தி குறித்து மேற்கொண்டும் கருதிப்பார்க்க தேவையில்லை என்று குழு தீர்மானித்தது.

3. பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்வதற்காக, தனியுரிமை பெற்ற முகவர்களை நியமித்தல் (கு.அ.பத்தி எண் 9.5.6.)

3.1. தொடக்கத்தில், பரிசுச் சீட்டுகள் கருவூலங்கள்மூலம் விற்பனை செய்யப்பட்டன (1987 வரை) என்றும், பரிசுச் சீட்டு துறையால் அல்லது மாவட்ட ஆட்சியர்களால் நியமிக்கப்பட்ட முகவர்கள், அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட சதவீத கழிவுத் தொகையைக் கழித்துக் கொண்டதன்மூலம் பரிசுச் சீட்டுகளின் மதிப்புத் தொகையைச் செலுத்திய பின்னர், பரிசுச் சீட்டுகளை வாங்கிச் செல்வது வழக்கம் என்றும், முகவர்கள் நியமனம், பரிசுச் சீட்டுகளின் விற்பனை, முகவர்களுக்கு கழிவுத் தொகை வழங்குதல், பரிசின் அமைப்பு, குலுக்கல்கள் நடத்துதல் மற்றும் பரிசுத் தொகை வழங்குதல் ஆகியவற்றை தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு பரிசுச் சீட்டு விதிகள் வகுத்துள்ளன என்றும் " பணம் கொடுத்து வாங்கிச் செல்லும்" அடிப்படையில் பரிசுச் சீட்டுகள் விற்பனை செய்யப்பட்டன என்றும், பல சமயங்களில் விற்பனை செய்யப்படாத பரிசுச் சீட்டுகள் துறையிடம்இருந்துவிடுகின்றன என்றும், இதனால், அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது என்றும் இந்த நிலையை சமாளிப்பதற்காக, பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்வதற்காக, தனியுரிமை பெற்ற முகவர்களை நியமிப்பதென்று 1985–ல் அரசு முடிவெடுத்து, அதற்காக,

ஒப்பந்தப்புள்ளிகளும் கோரப்பட்டன என்றும், ஆனால், இத்திட்டம் கைவிடப்பட்டது என்றும், அதற்கான காரணம் பதிவு செய்யப்படவில்லை என்றும், "அனைத்து பரிசுச் சீட்டுகளும் விற்பனை செய்யப்படுதல்" என்ற அடிப்படையில் (100 சதவீதம் வாங்குதல்), ஒவ்வொரு குலுக்கலுக்கும் வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி முறை மூலம் முகவர்களை நியமிப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றை, தமிழ்நாடு பரிசுச் சீட்டு ஆணையாளர், 1997-ல் மீண்டும் அளித்தார். ஆனால், தற்போதுள்ள முறையைத் தொடருமாறு அரசு உத்தரவிட்டது (1998 ஏப்ரல்) என்றும் குழு அறிகிறது.

இருப்பினும், 100 சதவீத பரிசுச் சீட்டுகளை வாங்குதல் என்ற அடிப்படையில், குறிப்பிட்ட முகவர்களுக்கு, பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்கிற முறையை, தமிழ்நாடு பரிசுச் சீட்டு ஆணையாளர் 1998 செப்டம்பரிலிருந்து அறிமுகப்படுத்தினார். இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், செயல்பட்டு வந்த முகவர்களின் எண்ணிக்கை மூன்றாக மட்டுமே இருந்தது. ஆனால், கடந்த காலத்தில், அரசு ஆயிரக்கணக்கான முகவர்களை அமர்த்தியிருந்தது. ஒப்புதலளிக்கப்பட்ட யாதொரு ஒப்பந்தப்புள்ளி நடைமுறையின்படி தனியுரிமை பெற்ற விற்பனை முகவர்களாக இந்த மூன்று முகவர்களும் தெரிவு செய்யப்படவில்லை. சீட்டுகளின் முகமதிப்பு, பரிசின் அமைப்பு, முகவருக்கான தள்ளுபடி முதலியவைகளின்மீது கட்டுப்பாடுகளை விதிகளில் உள்ள பிரிவுகள் தமிழ்நாடு லாட்டரி சீட்டு ஆணையரின் முறையான இசைவை பெறுவதற்கென விதித்திருந்தபோதும், நடைமுறையில் 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து முகவர் பரிசின் அமைப்பு, முகவர் விற்கும் விலை உட்பட சீட்டுகளின் முகமதிப்பு, அச்சடிக்கப்பட வேண்டிய சீட்டுகளின் எண்ணிக்கை, அச்சடிக்கப்பட வேண்டிய சீட்டுகளின் வடிவம் மற்றும் வண்ணம், சீட்டுகளின் மீதுள்ள கலைவேலைப்பாடுகள், குலுக்கலின் காலம், குலுக்கல் நடைபெறும் இடம் ஆகியவைகளை கருத்திற்கொண்டு முகவர் திட்டங்களை உருவாக்குகிறார்.

ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய் அளவில் லாட்டரி சீட்டு விற்பனையாவதால், இத்தகைய நேர்வுகளில் சீட்டுக்களை வழங்குவதற்கான கொள்முதல் மற்றும் பணிகளில் ஒரேவிதமாக ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி முறையே கடைபிடிக்கப்பட வேண்டும் என்று நிதி பற்றிய விதிகள் மற்றும் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு II(d) குறிப்பிடுகிறது. ஆனால், ஒப்பந்தப்புள்ளிகளைக் கேட்டுப் பெறாமல் மூன்று முகவர்களையிட்டும் ஆணையர் தெரிவு செய்தார். ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிமூலம், தனித்த ஒரு விற்பனை முகவர் நியமிக்கப்படாதது பற்றி சுட்டிக்காட்டப்பட்டபோது, தற்போதுள்ள நடைமுறையில், ஒரு குலுக்கலில் ஒன்றுக்கு மேற்பட்ட முகவர் பங்கேற்கலாம் என்று அரசு (2001, ஜூலை) பதிலளித்தது. ஒரு குலுக்கலில் ஒன்றுக்கு மேற்பட்ட முகவர்கள் பங்கேற்றதாக ஒரு நிகழ்வுகூட இல்லாததால், இந்தப் பதில் ஏற்கத்தக்கதாக இல்லை. ஒரு குறிப்பிட்ட குலுக்கலுக்கான திட்டம் ஒரு குறிப்பிட்ட முகவர் மூலமாக வடிவமைக்கப்படுகிறது; மேலும் 100 சதவீதம் அவற்றை வாங்கிக் கொள்வதாக ஒப்பந்தம் போடப்பட்ட பின்னரே, அச்சிடுவதற்கான உத்தரவு வழங்கப்படுகிறது.

3.2. 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து திட்டம் முடிவும் (8–1–2003) காலம் வரையில்தான் மூன்று முகவர்களும் மொத்தக் கொள்முதல் முறை மூலமாக பரிசுச் சீட்டுகளை வாங்கிக் கொண்டார்கள் என்றும், அரசு தரப்பில், இது தொடர்பாக முடிவு செய்யப்படாததால் அவர்கள் தனித்த விற்பனை முகவர்களாகச் செயல்படவில்லை என்றும் துறை அதன் விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

3.3. பரிசுச் சீட்டுகள் விற்பனையாகாததால் ஏற்படும் இழப்பினை தவிர்க்கும்பொருட்டு, இயக்குனரகம் "தனித்த விற்பனை முகவர்கள்" அதாவது "ஒட்டுமொத்த விற்பனை" என்ற முறையை அறிமுகப்படுத்தியதாக அரசு முதன்மைச் செயலர் தனது நேரடி விளக்கத்தின்போது கூறியுள்ளார். இம்முறையின்கீழ் எந்தவொரு நபரும் அச்சிடப்பட்ட அனைத்து சீட்டுகளின் மொத்த விலையை அரசுக்கு செலுத்திவிட்டு அவற்றை வாங்குவதாக இயக்குனரகத்தை அணுகி ஒப்புறுதி அளித்த பின்னர் அவரது

சொந்த லாட்டரி திட்டத்தை அளிக்கலாம். இதனால், இத்திட்டத்தின்கீழ் அரசு வருவாய் கீழ்காணுமாறு அதிகரித்துள்ளது:–

ஆண்டு	வருவாய் (கோடியில்)
1996–97	22.37
1997–98	27.98
1998–99	27.98
1999–2000	53.62

இதன்பின்னர் வரவு இருமடங்காக, அதாவது ரூ.124.41 கோடியாக அதிகரித்தது.

மேலும், லாட்டரி சீட்டு திட்டம் இந்திய அரசின் வழிகாட்டி குறிப்புகளில் உள்ள நிபந்தனைகளையும் நிறைவேற்றும் விதத்தில் உள்ளது.

மேலும், 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்கீழ் பொருட்கள் வாங்கல் அல்லது சேவைகள் பெறுதல் அடங்கும். ஆனால் லாட்டரி சீட்டு திட்டம் அவ்வாறானதல்ல, லாட்டரி சீட்டுகள் பொதுமக்களுக்கு விற்கப்பட்டு, பரிசுகள் குலுக்கலில் வெற்றிபெற்றவர்களுக்கு அளிக்கப்படுகின்றன, யாரொரு தனியரும் லாட்டரி திட்டத்தைத் தயாரித்து இயக்கத்தின் முன்வைத்து இசைவுபெறலாம். மூன்று முகவர்கள் மட்டும் நியமிக்கப்பட்டனர். இதற்கு ஒப்பந்தப்புள்ளி நடைமுறை தேவையில்லை என்று அரசு செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக சில கவர்ச்சிகரமான திட்டங்களை மக்கள் மத்தியில் செயல்படுத்தி மக்களின் நம்பிக்கையைப்பெற்றதன்மூலம், அம்முகவர்கள் அரசு தரப்பு முகவர்களாக செயல்பட்டனர்.

3.4. இப்பதிலால் குழு மகிழ்ச்சி அடையவில்லை. தற்போது நடைமுறையில் உள்ள பரிசு சீட்டு விற்பனை முறையைத் தொடரும்படி தமிழ்நாடு பரிசு சீட்டு ஆணையருக்கு அரசு அறிவுறுத்தியுள்ள நிலையில் ஆணையர் அரசின் அறிவுரைகளை மீறி ஒரு குறிப்பிட்ட முகவருக்கு சீட்டுகளை விற்கும் முறையை அறிமுகப்படுத்தியதை குழு அறிகிறது.

வருங்காலங்களில் அரசின் அறிவுரைகள் மீறப்படாமல் இருப்பதையும் அவை எழுத்திலும் கருத்திலும் கடைபிடிக்கப்படுகின்றனவா என்பதையும் துறை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என குழு பரிந்துரைக்கிறது.

4. பொதுமக்களுக்கு பரிசுத்தொகை அளித்தல் – பரிசு சீட்டுகளின் மொத்த விற்பனைத் தொகையில் 50 சதவீதம் அளிக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டும் குறைவாக பணம் அளித்தது: (த.அ.பத்தி எண்.9.5.7)

4.1. 1984 ஆம் ஆண்டு இந்திய அரசின் வழிகாட்டுதல்களின்படி பரிசுசீட்டுகளின் மொத்த விற்பனைத் தொகையில் 50 சதவீதத்திற்கும் குறையாமல் பொதுமக்களுக்கு பரிசுத்தொகையாக அளிக்கப்படவேண்டும் என்று தெளிவாக கூறியிருப்பதை குழு அறிகிறது.

சீட்டுகளின் முகமதிப்பில் 63 சதவீதத்திற்கு குறையாமல் பரிசுத்தொகை அளிக்கப்படவேண்டும் என்றும் சாதாரண குலுக்கல்களில் முகவரின் தரகுத் தொகை 22 சதவீதத்திற்கு மிகக்கூடாது என்றும், சிறப்பு குலுக்கல்களில் அவை முறையே 60 மற்றும் 25 சதவீதமாக இருக்கவேண்டும் என்றும் தமிழ்நாடு அரசும் (1999, அக்டோபர்) குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும் தணிக்கைக்கு அளிக்கப்பட்ட ஆவணங்களை சோதனை முறையில் ஆய்வு செய்தபோது, சீட்டுகளின் விற்பனைத் தொகையில் 41 முதல் 46 சதவீதத்தையே பொதுமக்கள் பரிசுத்தொகையாக பெற்றது தெரியவந்தது.

இதற்கான காரணங்கள் வருமாறு:–

(i) குலுக்கலில் வெற்றிபெற்ற சீட்டை விற்ற முகவருக்கு முதல் மற்றும் இரண்டாம் பரிசுத்தொகையிலிருந்து 10 சதவீதத்தை அளித்தது.

(ii) பரிசுபெறும் ஒவ்வொரு சீட்டிற்கும் அதை விற்ற முகவர்களுக்கு மிகைத்தொகை அளிக்க ஏதுவாகும் வகையில் முகவர்களால் வடிவமைக்கப்பட்ட திட்டத்தை ஏற்றுக்கொண்டது.

இதுபற்றி சுட்டிக்காட்டப்பட்டபோது, 1984 ஆம் ஆண்டு இந்திய அரசின் வழிகாட்டி குறிப்புகளுக்கு நாளது வரையில் சட்டப்படிக்கான செல்திறன் இல்லையென அரசு (2001, ஜூலை) பதிலளித்தது. 1998 ஆம் ஆண்டு லாட்டரி சீட்டுகள் (ஒழுங்குமுறை) சட்டத்தின்கீழ், இந்திய அரசால் அளிக்கப்படும் அறிவுரைகளை மாநில அரசு கடைபிடிக்கவேண்டும் என்பது கட்டாயம் என்பதால் இந்தப் பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

4.2. பரிசு சீட்டுகளின் முகமதிப்பில் 63 சதவீதத்திற்கும் குறையாத தொகை, குலுக்கலில் வெற்றிபெற்ற அனைவருக்கும் பரிசுத்தொகையாக அளிக்கப்படவேண்டும் என்று இந்திய அரசின் வழிகாட்டிகுறிப்புகளில் கூறப்பட்டிருப்பதால் இதன்படி குறிப்பிடப்பட்ட கால அளவுக்குள் பரிசைப் பெறவந்த அனைவருக்கும் பெரும்பாலும் அளிக்கப்பட்டன. மேலும் I மற்றும் II பரிசுத் தொகையிலிருந்து 10 சதவீதம் குறைக்கப்பட்டு பின்னர் அச்சீட்டை விற்ற முகவருக்கு அளிக்கப்பட்டது. பரிசுத் தொகையிலிருந்து வருமான வரியும் குறைக்கப்பட்டது. மேலும் 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து ஒவ்வொரு குலுக்கலிலும் பெறப்பட்ட மொத்த வசூலில் 60 சதவீதத்திற்கும் மேலான தொகை பொதுமக்கள் மற்றும் முகவர்களுக்கு செலுத்தவேண்டிய தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டது.

4.3. இந்திய அரசின் வழிகாட்டிக்குறிப்புகளில் கூறியுள்ளவைகளை மாநில அரசு கட்டாயம் கடைபிடித்தல் வேண்டும் என குழு கருதுகிறது.

முகவர்களுக்கு மிகைத்தொகை அளிக்கும் வகையில் முகவர்களால் வடிவமைக்கப்பட்ட திட்டத்தைத் துறை ஏற்றுக்கொண்ட செயலுக்கு நியாயமான காரணம் இருப்பின் அதனை துறை தெரிவிக்கவேண்டும் என்று குழு விரும்புகிறது.

5. பரிசுத்தொகையிலிருந்து பணத்தை குறைத்த முறையற்ற செயல் (த.அ.பத்தி எண் 9.5.7)

5.1. பரிசுச் சீட்டுகள் விற்பனை அளவு எவ்வளவாக இருந்தாலும் பரிசுத் தொகை வழங்கவேண்டிய நிலையில் அரசு உள்ளதால் பரிசுசீட்டுகள் அதிக அளவில் விற்பனையாகும்வரை, முகவர்களுக்கு மிகைத்தொகை அளிக்கும் வகையில் ஏற்படும் செலவைச் சரிகட்டும் நோக்கத்துடன் பொதுமக்களுக்கு வழங்கவேண்டிய I மற்றும் II பரிசுத் தொகையிலிருந்து 10 சதவீதத்தை பிடித்தம் செய்யலாம் என துறை அளித்த கருத்துருவின் (1990, ஜனவரி) அடிப்படையில் அரசு ஆணையிட்டதை (1992 பிப்ரவரி) குழு அறிகிறது. இருப்பினும் தமிழ்நாடு பரிசுசீட்டு விதிகள் இத்தகையதொரு பிடித்தத்திற்கு வகைசெய்யவில்லை. 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் "100 சதவீதம் கொள்முதல்" என்ற திட்டத்தை தொடங்கிவைத்தப்பின்னர் சீட்டுகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்தன. துறையின் வசம் விற்பனையாகாத சீட்டு ஏதும் இல்லை. எனவே, 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து I மற்றும் II ஆம் பரிசுகளிலிருந்து 10 சதவீதம் குறைக்கப்பட்டது நியாயமற்ற செயலாகும். 1998 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 2000 ஆம் ஆண்டு அக்டோபர்வரையில் இவ்விதமாக பரிசுத் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட ரூ.8.43 கோடி பரிசு வென்றவர்களுக்கு உரியதாகும். இத்தொகை அரசின் அனுமதியின்றி பிடித்தம் செய்யப்பட்டுள்ளது என்று குழு அறிகிறது. அரசின் ஆணைப்படியே இத்தொகை

பிடித்தம் செய்யப்பட்டுள்ளதால், பிடித்தம் செய்தது முறையற்ற செயல் அல்ல என அரசு (2001 ஜூலை) தெரிவித்து. பரிசுச் சீட்டு விற்பனை குறைவாக இருந்த ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு மட்டுமே பிடித்தம் செய்யுமாறு (10%) அரசு ஆணை பிறப்பித்திருந்தாலும் "100 சதவீத கொள்முதல் முறை" தொடங்கப்பட்ட பின்னர் ஏற்பட்ட சூழ்நிலைக்கு, பிடித்தம் செய்வது தேவையற்றதாகிவிட்டதாலும், துறையின் பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

5.2. "பல்வகை செலவுகளுக்கென I மற்றும் II பரிசுத் தொகையிலிருந்து 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படும்" என்ற வாசகம் பரிசுச் சீட்டின் பின்பக்கத்தில் அச்சிடப்பட்டு
ஆணையாளரால் இசைவு அளிக்கப்பட்டுள்ளதென துறை தனது விளக்கக் குறிப்பில் கூறியுள்ளது.

5.3. இப்பதில் மழுப்பலாகவும், பொருள் விளக்கம் அளிப்பதில் மிகவும் பொதுப்படையாகவும் இருப்பதாக குழு கண்டறிகிறது.

அரசின் ஆணைகள் பரிசுச் சீட்டுகளின் விற்பனை சதவீதம் குறைவாக இருந்த குறிப்பிட்ட கால அளவிற்கு மட்டுமே பொருந்தும் என்பதாலும், 100 சதவீத பரிசுச் சீட்டுகளை வாங்குதல் என்றமுறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அவை தேவையற்றதாகிவிட்டதாலும், துறையின் தற்போதைய மதிப்பீட்டினை குழுவால் ஏற்க இயலவில்லை.

விற்பனை அதிகரிக்கும்வரையில், முகவர்களுக்கு போனஸ் வழங்குவதற்காக இந்தக் குறைப்பு நடவடிக்கை இருந்தது என்றும், 100 சதவீத பரிசுச் சீட்டுகளை வாங்குதல்முறை அறிமுகப்படுத்தப்பட்டபின்னர் இது அவசியமற்றது என்றும் தணிக்கையில் தெளிவாகக் காட்டப்பட்டது.

துறையின் நடவடிக்கை குறித்து செல்திறனுள்ள காரணங்களை துறை அளிக்க வேண்டுமென குழு விரும்புகிறது. குழு விளக்கம் கோருகிறது.

6. பொதுமக்களுக்கு பரிசுத் தொகை வழங்குவதில் நிலுவை ஏற்பட்டமை (கு.அ.பத்தி எண் 9.5.7.)

6.1. 2001 ஆம் ஆண்டு ஜனவரி மாத நிலவரப்படி அறிவிக்கப்பட்ட பரிசுத்தொகையான ரூ.20.30 கோடி வழங்கப்படாமல் இருந்தது என்று பொதுமக்களுக்கு பரிசுத் தொகை வழங்கியது குறித்து ஆணையாளரால் அளிக்கப்பட்ட விவர அறிக்கையிலிருந்து தெரியவந்தது என்று குழு அறிகிறது.

பரிசுத் தொகைகளை உடனடியாக வழங்குவதற்கு பதவிப் பெயர் வைப்புத் தொகைக் கணக்குகளை துறை கையாளுவதற்கு அரசு அனுமதித்தபோதிலும்கூட, பரிசுத்தொகை வென்றவர்களுக்கு பரிசுத்தொகை வழங்குவதில் ஆறு மாதங்களுக்குமேல் காலதாமதம் ஏற்பட்டது. இத்தகைய காலதாமதமானது பொதுமக்களின் மனங்களிலிருந்து நம்பகத் தன்மையினை இழக்கச் செய்துவிடும். நிதி இருப்பு மற்றும் ரொக்க நிருவாகத்தின் அடிப்படையில் பல்வேறு துறைகளுக்கு நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தன என்றும், இனிமேல் காலதாமதம் இல்லாமல் பொதுமக்களுக்கு பரிசுத்தொகை வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கு கவனம் செலுத்தப்படும் என்றும் இதுகுறித்து சுட்டிக்காட்டப்பட்டபோது, அரசு பதிலளித்தது (2001 ஜூலை) பரிசுச் சீட்டுகள் விற்பனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தொகையிலிருந்து பரிசுத்தொகையினை உடனுக்குடன் வழங்குவது துறையின் முக்கிய பொறுப்பு என்பதால் இது சரியான விளக்கமல்ல.

6.2. நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில், பரிசினை வெல்கின்ற பரிசுச் சீட்டுகளும் சம்பந்தப்பட்டிருந்ததால் பரிசுத் தொகை வழங்குவது நிறுத்திவைக்கப்பட்டது என்றும், பொதுமக்களுக்கு பரிசுத் தொகை வழங்குவது நிறுத்திவைக்கப்பட்டிருந்தது என்றும் துறை தன்னுடைய விளக்கக் குறிப்புகளில் தெரிவித்தது.

6.3. இப்பதில் மிகவும் பொதுப்படையாகவும் திட்டவட்டமற்றதாக இருந்ததாகவும் குழு கருதுகிறது.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் சம்பந்தப்பட்ட பரிசுச் சீட்டுகள் குறித்து இந்த இடத்தில் தணிக்கை குறிப்பிடவில்லை. பரிசுத் தொகை வென்றவர்களுக்கு உடனுக்குடன் பரிசுத் தொகை வழங்குவதற்காக, பதவிப் பெயர் வைப்புத் தொகைக் கணக்கு ஒன்றினைக் கையாளுவதற்கு துறைக்கு அனுமதியளிக்கப்பட்டபோதிலும்கூட, பரிசுத் தொகை வென்றவருக்கு காலம் கடந்து தொகை வழங்கப்பட்டது பற்றியே தணிக்கை குறிப்பிட்டது.

இனிமேல், இத்தகைய இனங்களில், உடனுக்குடன் பரிசுத் தொகைகளை வழங்குவதற்கு குழு வலியுறுத்துகிறது.

7. முகவருக்கு அளவிற்கு அதிகமாக நிதி உதவி அளிக்கப்பட்டமை (த.அ.பத்தி எண்.9.5.8)

(a) மிகையாக 'போனஸ்' தொகை வழங்கப்பட்டமை

தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு பரிசுச் சீட்டு விதிகளின் 20 ஆம் விதியின்படி, பரிசு வெல்கின்ற பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்துள்ளதற்காக, பரிசுத்தொகையின் 10 சதவீதம் மட்டுமே ஊக்கத்தொகையாக முகவர்களுக்கு வழங்கத்தக்கதாகும் என்று குழு அறிகிறது. முகவர்களுக்கு, பரிசுச்சீட்டுகளின் விற்பனை குறித்த சான்றிதழ் மற்றும் பெருமளவிலான பரிசுச்சீட்டு போனஸ் என்ற பெயரில் வழங்கத்தக்க/வழங்கப்பட 'போனஸ்' (ஊக்கத்தொகை) பரிசுத்தொகையின் 13 முதல் 41 சதவீதம் அளவிற்கு இருந்தது என்பது 1998 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2001 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான காலத்திற்கு துறையால் ஏற்பளிக்கப்பட்ட பரிசு முறைகளை கூர்ந்தாய்வு செய்தபோது தெரியவந்தது.

இதுகுறித்து சுட்டிக்காட்டப்பட்டபோது, முகவர்களுக்கு ஊக்கத்தொகையாக (போனஸ்) தொகை அளிக்கப்படுகிறது என்றும், ஏனெனில், அவர்கள் உத்வேகத்துடன் விற்பனை உத்திகளை மேற்கொள்ளவேண்டியிருப்பதுடன், ஏனைய மாநில பரிசுச் சீட்டுகளால் ஏற்பட்ட கடுமையான போட்டி காரணமாக விற்கப்படாத சீட்டுகள் குறித்த இடரினை ஏற்கவேண்டியிருந்தது என்றும் அரசு பதிலளித்தது (2001 ஜூலை), குறிப்பிட்ட பரிசுச்சீட்டு குலுக்கலுக்கு, ஒன்றுக்கும் மேற்பட்ட முகவர் இருக்கின்றபோதுதான், ஊக்கத்தொகை அளிக்கப்பட்டது குறித்த பிரச்சினை எழும் என்றும் தற்போதைய ஏற்பாட்டு முறையில் அதற்கான வாய்ப்பு இல்லாததால் இப்பதில் ஏற்கத்தக்கதல்ல.

1998 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட அளவைக் காட்டிலும் ரூ.23.18 கோடி மிகையாக வழங்கப்பட்டது என்று கணக்கிடப்பட்டது.

7.2. நூறு சதவீதம் விற்பனையை ஊக்கப்படுத்தவும், புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும், 1998 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் 'போனஸ்' ஊக்கத் தொகை வழங்கப்பட்டது என்று துறை தன்னுடைய விளக்கக் குறிப்புகளில் வெறுமனே தெரிவித்துள்ளது.

7.3. 100% விற்பனையை ஊக்கப்படுத்துவதற்காகவும், புதிய திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும், 1996 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது தெரியவருகிறது என்று நேரடியாக விளக்கமளித்தபோது அரசு முதன்மைச் செயலாளர் தெரிவித்தார். 2000 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், சிறப்பு குலுக்கல் திட்டத்திற்காக, தமிழ்நாடு அரசு 10% வரையில் ஊக்கத்தொகை வழங்கியது என்று

அவர் மேலும் தெரிவித்தார். குறிப்பிட்ட குலுக்கலுக்கு 10% ஊக்கத் தொகை அளிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், பெரும்பாலான இனங்களில், 10 சதவீதத்திற்கும் குறைவாக மட்டுமே போனஸ் தொகை வழங்கப்பட்டது. 'போனஸ்' தொகை, 41 சதவீதம் வரைக்கும் வழங்கப்பட்டது உண்மையா என்று குழு விசாரணை செய்தபோது, தேவையான விவரங்கள் தன்னிடம் தயாராக இல்லை என்று அரசு முதன்மைச் செயலாளர் பதிலளித்தார்.

2003 ஆம் ஆண்டில், பரிசுச் சீட்டுத் திட்டம் நிறுத்தப்பட்டு, இயக்ககமும் கலைக்கப்பட்டது என்றும், இத்திட்டம், எஞ்சிய நிலையில் அவர்களிடம் உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். எனவே, மிகையாக 'போனஸ்' தொகை வழங்கப்பட்டதற்கான காரணத்தை, சம்பந்தப்பட்ட கோப்புகளிலிருந்து கண்டுபிடிப்பது அவர்களுக்கு சாத்தியமற்றதாகும்.

7.4 இது குறித்து மேற்கொண்டும் கருதிப்பார்க்கத் தேவையில்லை என்று குழு முடிவு செய்தது.

8(C) விற்கப்படாத பரிசுச் சீட்டுகளுக்கு 'போனஸ்' தொகை வழங்கப்பட்டமை (த.அ.பத்தி எண் 9.5.8)

8.1 ஒவ்வொரு குலுக்கலின் பரிசு முறையானது, பரிசுத் தொகையினை வென்ற பரிசுச் சீட்டினை விற்பனை செய்த முகவர்களுக்கு / விற்பனையாளர்களுக்கு 'போனஸ்' தொகை வழங்குவதற்கு வகை செய்கிறது என்று குழு அறிகிறது. இந்த 'போனஸ்' தொகையானது, பரிசுத் தொகையின் 10 சதவீதத்திற்கு இணையானதாகும். பரிசுத் தொகையினை வென்ற பரிசுச் சீட்டினை, முகவர் விற்பனை செய்திருந்தால் மட்டுமே, 'போனஸ்' தொகையினை பெறுவதற்கு முகவர் உரிமையுடையவராகிறார். முகவரே பரிசுத் தொகையினைக் கோருகின்றபோது, பரிசுச் சீட்டு விற்கப்படாமல் அவரிடம்தான் இருந்தது என்பது நிரூபணமாகிறது. எனினும், முகவரே பரிசுச் சீட்டினை வைத்திருப்பவராக பரிசுத் தொகை கோரியுள்ளதுடன், தணிக்கையில் சரிபார்க்கப்பட்ட 4 குலுக்கல்களுக்கு ரூ.20,000, போனஸ் தொகையும், பரிசுத் தொகையுடன் முகவருக்கு வழங்கப்பட்டது என்று கண்டறியப்பட்டது. இது குறித்து சுட்டிக்காட்டப்பட்டபோது, இனிமேல் கவனமாக இருப்பதாகவும், விற்பனையாகாத பரிசுச் சீட்டுகளுக்கு, முகவருக்கு 'போனஸ்' தொகை வழங்காமல் கவனித்துக் கொள்ளப்படுமென்றும் அரசு தெரிவித்தது (2001 ஜூலை)

8.2 துறையானது, 100 சதவீதத்திற்கு பரிசுச் சீட்டுகளை விற்பனை செய்தது என்றும் எனவே, துறையைப் பொறுத்தவரையில் விற்பனையாகாத பரிசுச் சீட்டுகள் என்ற கேள்விக்கே இடமில்லை என்றும், விற்பனை செய்யப்பட்ட பரிசுச் சீட்டுகளுக்கு மட்டுமே 'போனஸ்' தொகை வழங்கப்பட்டது என்றும் துறை தன்னுடைய விளக்கக் குறிப்புகளில் தெரிவித்துள்ளது.

8.3 துறையின் மாறிகொண்டேயிருக்கிற நிலைப்பாடு குறித்து அறிந்து குழு வருந்துகிறது.

முன்னர், தணிக்கைக்கு பதிலளித்தபோது, இனிமேல் கவனமுடன் இருப்பதாகவும், விற்பனையாகாத பரிசுச் சீட்டுகளுக்காக முகவருக்கு 'போனஸ்' தொகை வழங்கப்படமாட்டாது என்றும் துறை ஒப்புக்கொண்டது.

தற்போது, துறை முற்றிலும் மாறுபட்ட பதிலினை அளித்துள்ளது.

முகவர், பரிசுச்சீட்டினை வைத்திருப்பவராக, பரிசுத் தொகை கோரியதுடன், பரிசுத் தொகையுடன் தணிக்கையில் சரிபார்க்கப்பட்ட 4 குலுக்கல்களுக்காக முகவருக்கு ரூ.20,000/– 'போனஸ்' தொகையும் வழங்கப்பட்டது என்றும் தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

பரிசுச் சீட்டினை வைத்திருப்பவராக பரிசுத் தொகை கோரியதால், பரிசுச் சீட்டு விற்கப்படவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. குழு, விளக்கம் கோருகிறது.

9. நிதிகளை மாற்றுவதில் குறைவு ஏற்பட்டமை (கு.அ.பத்தி எண்.9.5.10)

(a) தமிழ்நாடு சிறப்பு நலநிதிக்கு, நிதிகளை மாற்றுவதில் குறைவு ஏற்பட்டமை மற்றும் நலத்திட்டங்களுக்கு நிதியினை சரிவர பயன்படுத்தாமை

9.1 நலத் திட்டங்களுக்கான ஆதாரங்களை பெருக்குவதே பரிசுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் என்றும் அதன்படி, 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத அரசாணையில் தெரிவித்தவாறாக ஒவ்வோராண்டும் பரிசுச் சீட்டுகளிலிருந்து கிடைக்கின்ற ஆண்டு நிகர வருவாயின் 75 சதவீதமானது, பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு சிறப்பு நலத்திட்ட நிதிக்கு மாற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது.

சோதனை முறையில் சரிபார்த்ததில் 1995–1996 ஆம் ஆண்டு முதல் 1999–2000 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் இத்திட்டத்தின்கீழ் நிகர தொகையிலிருந்து, நிதிக்கு மாற்றப்பட வேண்டிய 75 சதவீதமாக ரூ.50.64 கோடிக்குப் பதிலாக ரூ.42.83 கோடி மட்டுமே மாற்றப்பட்டது என்பதும் ரூ.7.81 கோடி மாற்றப்படவில்லை என்பதும் தெரிய வந்தது. எஞ்சிய தொகை ரூ.7.81 கோடி இம்மாநிலத்தின் தொகுதி நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இது இத்திட்டத்தின் நோக்கத்திற்கு முரணாகும். ஆண்டுவாரியான விவரங்கள் இணைப்பு–1–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 1995–1996 ஆம் ஆண்டுமுதல் 1999–2000 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில், தமிழ்நாடு நலநிதிக்கு மாற்றப்பட்ட தொகை ரூ.42.83 கோடியில், ரூ.12.38 கோடி மட்டுமே (29 விழுக்காடு) நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. 31.3.2000 ஆம் நாள் நிலவரப்படி எஞ்சிய தொகை ரூ.30.45 கோடி பயன்படுத்தப்படாமல் உள்ளது.

தமிழ்நாடு நலநிதி நிருவாகம் குறித்த அரசு ஆணையின்படி, நலத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி குறித்து ஆய்வு செய்வதற்கும், தமிழ்நாடு நலநிதிக்கு மாற்றப்படுவது குறித்து முடிவு எடுப்பதற்கும் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். ஆனால், 1996–1997–லிருந்து 1999–2000 வரையிலான கால அளவில் குழு ஏதும் அமைக்கப்படவில்லை. இத்தகைய கூட்டங்களும் நடத்தப்படவில்லை.

இந்த விஷயம் குறித்து அரசுக்குத் தெரிவித்தபோது, குலுக்கல் சீட்டிலிருந்து பெறப்படும் வருவாயை முன்கூட்டியே அறிந்துகொள்ள இயலாது என்றும், எனவே, நிதி மாற்றம் வரவு–செலவு திட்ட நிதி ஒதுக்கீடு அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. குலுக்கல் சீட்டின் முக்கிய நோக்கம் என்னவெனில், நலத் திட்டங்களுக்காக இத்திட்டத்தின் நிகர வருவாயில் 75 சதவீதம் மாற்றப்படவேண்டும் என்பதால், அரசின் பதில் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

9.2 முந்தைய ஆண்டுகளில், ரூ.3122.11 இலட்சம் அளவுக்கு, தமிழ்நாடு சமூக நலநிதிக்கு மாற்றுவதற்கும் 31.3.2005 வரையில் இந்நிதியில் சேர்ந்து வந்த தொகையில் ரூ.7906.35 இலட்சம் அளவுக்கு செலவு செய்வதற்கும் அரசுக்கு செயற்குறிப்பு ஒன்றை துறை அனுப்பி இருந்தது என்றும், துறை அனுப்பிய செயற்குறிப்பை அரசு ஏற்றுக்கொண்டு 2005–2006 ஆம் ஆண்டு கால அளவில், குறைந்தளவு தேவை திட்டத்தின்கீழ், ஊரக குடிநீர் வழங்கல் திட்டத்திற்காக, எஞ்சிய நிதியை பயன்படுத்துவதன்மூலம், மேற்சொன்ன தொகையை செலவு செய்வதற்கு உத்தரவு பிறப்பித்தது என்றும் துறை தன் விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

9.3 தமிழ்நாடு சமூக நலநிதிக்கு ரூ.50.64 கோடி மாற்றம் செய்வதற்குப் பதிலாக (1995–1996 முதல் 1999–2000 வரையிலான கால அளவில் ஆண்டு நிகரத் தொகையில் 75 விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்பட்டது) ரூ.42.83 கோடி மட்டுமே மாற்றம் செய்யப்பட்டது என்றும் ரூ.7.81 கோடி மாற்றப்படவில்லை என்றும் குழு அறிகிறது.

முந்தைய ஆண்டுகள் தொடர்பாக ரூ.31.22 கோடியை தமிழ்நாடு சமூக நலநிதிக்கு மாற்றுவதற்கு அரசுக்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டதாக துறை தன் விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

2000–2001 ஆம் ஆண்டிலிருந்து 2003 ஜனவரியில் இத்திட்டம் முடிக்கப்படும் வரையிலான கால அளவை கவனத்தில்கொண்டு, ரூ.31.22 கோடி என கணக்கிடப்பட்டதா என்பது தெளிவாக்கப்படவில்லை.

மாற்றப்பட வேண்டிய நிதி, (ஆண்டு நிகர வருவாயில் 75 விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்பட்டது) இந்நிதிக்கு மாற்றம் செய்யப்பட்ட தொகை ஆகியவை குறித்த முழுமையான விவரங்கள் பின்னர் இந்நிதியிலிருந்து தொகை செலவிடப்பட்ட திட்டம் பற்றிய விவரங்கள் நாளது நிலவரப்படி நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின் அதன் விவரங்கள் ஆகியவற்றைப் பெற குழு விரும்புகிறது.

10.(b) தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் நலநிதிக்கு நிதியை குறைவாக மாற்றியது (த.அ.பத்தி எண் 9.5.10)

10.1 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் பிறப்பித்த அரசாணைகளின்படி, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்களில் நடத்தப்படும் முதலாவது குலுக்கலின் நிகர விற்பனைத் தொகை முழுவதும், தமிழ்நாடு முன்னாள் இராணுவப் படை வீரர்கள் நலநிதிக்கு மாற்றப்பட வேண்டும்.

சோதனை முறையில் சரிபார்த்ததில், வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் துறை நிதியை மாற்றம் செய்ததின் விளைவாக, இந்நிதிக்கு குறைவாக தொகை மாற்றம் செய்யப்பட்டது. நிகர வருவாய் ரூ.18.74 இலட்சத்தில், ரூ.5.25 இலட்சம் மட்டுமே (1996–1997 முதல் 2000–2001 வரையிலான கால அளவுக்கு முன்னாள் படைவீரர் நலநிதிக்கு மாற்றம் செய்யப்பட்டது. ரூ.13.49 இலட்சம் மாற்றம் செய்யப்படவில்லை. இதனைச் சுட்டிக்காட்டியபோது, சிறப்பு நலநிதிக்கு வருவாயை உரியவாறு மாற்றம் செய்வதை உறுதி செய்வதற்காக உரிய முறையை வகுப்பதற்கு அரசு ஒப்புக்கொண்டது. (2001 ஜூலை).

10.2 ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்களில் நடைபெறும் முதல் குலுக்கலில் கிடைக்கும் நிகர ஆதாயம் 19.12.1981 ஆம் நாளிட்ட அரசாணையின்படி, முன்னாள் இராணுவப் படைவீரர் நலநிதிக்கு மாற்றப்பட்டது என்றும், 1981 ஆம் ஆண்டிலிருந்தே இந்நடைமுறை பின்பற்றப்பட்டு வந்ததாகவும் துறை தன் விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

10.3 இத்தகைய மேம்போக்கான பதில் குழுவுக்கு மனநிறைவளிக்கவில்லை.

முன்னர் தணிக்கையில் தெரிவிக்கப்பட்டபடி, நிர்ணயிக்கப்பட்டவாறு, நிதிமாற்றத்தை உறுதி செய்வதற்கான உரியமுறை வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டதா என குழு அறிய விரும்புகிறது. ஒவ்வொரு ஆண்டின் டிசம்பர் திங்களில் நடைபெறும் முதலாவது குலுக்கலில் கிடைக்கும் நிகர விற்பனைத் தொகையின் ஆண்டுவாரியான விவரங்களையும், 1996–97ஆம் ஆண்டிலிருந்து 2003 சனவரியில் இத்திட்டம் முடிக்கப்பட்ட வரையில் தமிழ்நாடு முன்னாள் இராணுவ படைவீரர் நலநிதிக்கு மாற்றம் செய்யப்பட்ட தொகையையும் குழு கோருகிறது.

11. முகவர்கள் வழங்கிய பரிசுத் தொகையைக் கணக்கில் காட்டத் தவறியது (த.அ.பத்தி எண் 9.5.11)

11.1 ரூ.5000/–வரையிலான பரிசுத் தொகையை முகவர்கள் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும், இவ்வாறு வழங்கப்பட்ட மற்றும் ஈடுசெய்வதற்காக

கோரப்பட்ட தொகைகளின் உண்மைத் தன்மையை சரிபார்ப்பதற்காக பரிசு விழுந்த சீட்டுக்களை உரியவாறு ஆதாரங்காட்டி இத்தகைய பற்று வரவுகளுக்கான கணக்குகள் அளிக்கப்படவேண்டும் என்று குழு அறிகிறது.

இருப்பினும் பொது மக்களுக்கு முகவர்கள் வழங்கியதாகக் கூறப்படும் பரிசுத் தொகைகளைப் பொறுத்தவரையில் முகவர்கள் பரிசு பெற்றவர்களின் விவரங்கள் எதையும் அளிக்கவில்லை. இதுகுறித்து துறை ஒருபோதும் வலியுறுத்தவில்லை என்பதுடன், எந்தவொரு கணக்கையும் முகவர்கள் அளிக்கவில்லை. முகவர்கள் பரிசு விழுந்த சீட்டுக்களை மட்டும் ஒப்படைத்தனர். அதற்கான ரூ.66.27 கோடி தொகை, பரிசுச் சீட்டுக்களைப் பெற்றுச் சென்றவகையில், அவர்களிடமிருந்து வரவேண்டிய தொகையிலிருந்து சரிகட்டப்பட்டது. பரிசு வென்றவர்கள், பரிசுத் தொகையை அவர்கள் கோரியதற்கு அடையாளமாக, பரிசு விழுந்த சீட்டின் பின்புறத்தில், அதற்குரிய இடத்தில் கையொப்பமிட்டு, பெயர் மற்றும் முகவரியை எழுத வேண்டும். முகவர்கள் தொகையை ஈடுசெய்வதற்காக அளித்த அனைத்து கோரிக்கைகளிலும், பரிசுச் சீட்டுகளில் கையொப்பம் ஏதும் இல்லை என்பதுடன் பரிசுத் தொகை வழங்கப்பட்ட நபர்களைத் தெரிவிக்கின்ற யாதொரு விவர அறிக்கையையும் முகவர்கள் தாக்கல் செய்யவில்லை. பரிசு விழுந்தவர்களுக்கு முகவர்கள் பரிசுத் தொகையை வழங்கியதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லாத நிலையில் இருந்திருக்குமாயின், விற்பனை செய்யப்படாத பரிசுச் சீட்டு போன்று முகவர் பரிசுத் தொகையைக் கோருவதற்கு சாத்தியக்கூறு உள்ளது. வருமானவரிச் சட்டத்தின் விதித் துறைகளும் இதற்குப் பொருந்தும். இந்த விடுபாட்டினை சுட்டிக்காட்டியபோது, இது குறித்து தக்க அறிவுரைகள் வழங்கப்படும் என்று அரசு பதிலளித்தது. (2001 ஜூலை).

11.2 ஒரு முகவருக்கு குறிப்பிட்ட ஒரு குலுக்கலுக்கான பரிசுச் சீட்டுக்களை துறை விற்பனை செய்தது என்றும், அவர் ஒரே கோரிக்கையில் பரிசுச் சீட்டுக் கட்டுகளில் பரிசு விழுந்த சீட்டுகளுக்கு தொகை கோரியதுடன் உரிய படிவத்தில் அவருடைய முழு முகவரியையும் குறிப்பிட்டார் என்றும் 100 விழுக்காடு சீட்டுக்களையும் முகவர்கள் பெற்றுச் செல்வதன் அடிப்படையில் விற்பனை ஆகாத சீட்டுக்களை துறை வைத்துள்ளது என்ற பிரச்சினைக்கு இடமில்லை என்றும் தன் விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

11.3 பதில் மழுப்பலாக உள்ளது என்பதுடன் திட்டவட்டமாக இல்லை என்றும் குழு அறிகிறது. தொகை கோரியது சரி என்பதையும், பரிசுத் தொகை உரிய நபருக்கு வழங்கப்பட்டது என்பதையும், இக்கோரிக்கைகளுக்கு ஆதரவாக நம்பத்தகுந்த ஆவணங்கள் பெறப்பட்டன என்பதையும் துறை உறுதி செய்யத் தவறியது என்று தணிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இதற்காக, துறை தற்போது அளித்த பதில், பொருத்தமாக இல்லை.

இது குறித்த விளக்கத்தையும், திட்டவட்டமான பதிலையும் பெற குழு விரும்புகிறது.

12. பொது

12.1 இவ்வறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள அனைத்துப் பரிந்துரைகளின் மீதும் அரசு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். காலக்கெடு குறிப்பிட்டுள்ள நேர்வுகளில் அதனைப் பின்பற்ற வேண்டும். காலக்கெடு குறிப்பிடாத நேர்வுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இறுதி அறிக்கை ஆறு மாதத்திற்குள் குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும்.

சென்னை 600 009.
22, நவம்பர், 2011
கார்த்திகை, 6
திருவள்ளுவர் ஆண்டு–2042.

ச. இராமச்சந்திரன்,
தலைவர்,
பொதுக் கணக்குக் குழு.

இணைப்பு

பரிந்துரைகளின் சுருக்கம்

1. இந்தப் பத்தி குறித்து மேற்கொண்டும் கருதிப்பார்க்க தேவையில்லை என்று குழு தீர்மானித்தது. (பத்தி எண்.2.4)

2. இப்பதிலால் குழு மகிழ்ச்சி அடையவில்லை. தற்போது நடைமுறையில் உள்ள பரிசு சீட்டு விற்பனை முறையைத் தொடரும்படி தமிழ்நாடு பரிசு சீட்டு ஆணையருக்கு அரசு அறிவுறுத்தியுள்ள நிலையில் ஆணையர் அரசின் அறிவுரைகளை மீறி ஒரு குறிப்பிட்ட முகவருக்கு சீட்டுகளை விற்கும் முறையை அறிமுகப்படுத்தியதை குழு அறிகிறது. வருங்காலங்களில் அரசின் அறிவுரைகள் மீறப்படாமல் இருப்பதையும் அவை எழுத்திலும் கருத்திலும் கடைபிடிக்கப்படுகின்றனவா என்பதையும் துறை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என குழு பரிந்துரைக்கிறது. (பத்தி எண்.3.4)

3. இந்திய அரசின் வழிகாட்டிக்குறிப்புகளில் கூறியுள்ளவைகளை மாநில அரசு கட்டாயம் கடைபிடித்தல் வேண்டும் என குழு கருதுகிறது. முகவர்களுக்கு மிகைத்தொகை அளிக்கும் வகையில் முகவர்களால் வடிவமைக்கப்பட்ட திட்டத்தைத் துறை ஏற்றுக்கொண்ட செயலுக்கு நியாயமான காரணம் இருப்பின் அதனை துறை தெரிவிக்கவேண்டும் என்று குழு விரும்புகிறது. (பத்தி எண்.4.3)

4. இப்பதில் மழுப்பலாகவும், பொருள் விளக்கம் அளிப்பதில் மிகவும் பொதுப்படையாகவும் இருப்பதாக குழு கண்டறிகிறது. அரசின் ஆணைகள் பரிசுச் சீட்டுகளின் விற்பனை சதவீதம் குறைவாக இருந்த குறிப்பிட்ட கால அளவிற்கு மட்டுமே பொருந்தும் என்பதாலும், 100 சதவீத பரிசுச் சீட்டுகளை வாங்குதல் என்றமுறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அவை தேவையற்றதாகிவிட்டதாலும், துறையின் தற்போதைய மதிப்பீட்டினை குழுவால் ஏற்க இயலவில்லை. விற்பனை அதிகரிக்கும் வரையில், முகவர்களுக்கு போனஸ் வழங்குவதற்காக இந்தக் குறைப்பு நடவடிக்கை இருந்தது என்றும், 100 சதவீத பரிசுச் சீட்டுகளை வாங்குதல்முறை அறிமுகப்படுத்தப்பட்டபின்னர் இது அவசியமற்றது என்றும் தணிக்கையில் தெளிவாகக் காட்டப்பட்டது. துறையின் நடவடிக்கை குறித்து செல்திறனுள்ள காரணங்களை துறை அளிக்க வேண்டுமென குழு விரும்புகிறது. குழு விளக்கம் கோருகிறது. (பத்தி எண்.5.3)

5. இனிமேல், இத்தகைய இனங்களில், உடனுக்குடன் பரிசுத் தொகைகளை வழங்குவதற்கு குழு வலியுறுத்துகிறது. (பத்தி எண்.6.3)

6. இது குறித்து மேற்கொண்டும் கருதிப்பார்க்கத் தேவையில்லை என்று குழு முடிவு செய்தது. (பத்தி எண்.7.4)

7. துறையின் மாறிகொண்டேயிருக்கிற நிலைப்பாடு குறித்து அறிந்து குழு வருந்துகிறது. முன்னர், தணிக்கைக்கு பதிலளித்தபோது, இனிமேல் கவனமுடன் இருப்பதாகவும், விற்பனையாகாத பரிசுச் சீட்டுகளுக்காக முகவருக்கு 'போனஸ்' தொகை வழங்கப்படமாட்டாது என்றும் துறை ஒப்புக்கொண்டது. தற்போது, துறை முற்றிலும் மாறுபட்ட பதிலினை அளித்துள்ளது. முகவர், பரிசுச்சீட்டினை வைத்திருப்பவராக, பரிசுத் தொகை கோரியதுடன், பரிசுத் தொகையுடன் தணிக்கையில் சரிபார்க்கப்பட்ட 4 குலுக்கல்களுக்காக முகவருக்கு ரூ.20,000/– 'போனஸ்' தொகையும் வழங்கப்பட்டது என்றும் தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது. பரிசுச் சீட்டினை வைத்திருப்பவராக பரிசுத் தொகை கோரியதால், பரிசுச் சீட்டு விற்கப்படவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. குழு, விளக்கம் கோருகிறது. (பத்தி எண்.8.3)

8. தமிழ்நாடு சமூக நலநிதிக்கு ரூ.50.64 கோடி மாற்றம் செய்வதற்குப் பதிலாக (1995–1996 முதல் 1999–2000 வரையிலான கால அளவில் ஆண்டு நிகரத் தொகையில் 75 விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்பட்டது) ரூ.42.83 கோடி மட்டுமே மாற்றம் செய்யப்பட்டது என்றும் ரூ.7.81 கோடி மாற்றப்படவில்லை என்றும் குழு அறிகிறது. முந்தைய ஆண்டுகள் தொடர்பாக ரூ.31.22 கோடியை தமிழ்நாடு சமூக நலநிதிக்கு மாற்றுவதற்கு அரசுக்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டதாக துறை தன் விளக்கக் குறிப்பில் தெரிவித்துள்ளது. 2000–2001ஆம் ஆண்டிலிருந்து 2003 ஜனவரியில் இத்திட்டம் முடிக்கப்படும் வரையிலான கால அளவை கவனத்தில்கொண்டு, ரூ.31.22 கோடி என கணக்கிடப்பட்டதா என்பது தெளிவாக்கப்படவில்லை. மாற்றப்பட வேண்டிய நிதி, (ஆண்டு நிகர வருவாயில் 75 விழுக்காடு என்ற வீதத்தில் கணக்கிடப்பட்டது) இந்நிதிக்கு மாற்றம் செய்யப்பட்ட தொகை ஆகியவை குறித்த முழுமையான விவரங்கள் பின்னர் இந்நிதியிலிருந்து தொகை செலவிடப்பட்ட திட்டம் பற்றிய விவரங்கள் நாளது நிலவரப்படி நிலுவைத் தொகை ஏதேனும் இருப்பின் அதன் விவரங்கள் ஆகியவற்றைப் பெற குழு விரும்புகிறது. (பத்தி எண்.9.3)

9. இத்தகைய மேம்போக்கான பதில் குழுவுக்கு மனநிறைவளிக்கவில்லை. முன்னர் தணிக்கையில் தெரிவிக்கப்பட்டபடி, நிர்ணயிக்கப்பட்டவாறு, நிதிமாற்றத்தை உறுதி செய்வதற்கான உரியமுறை வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டதா என குழு அறிய விரும்புகிறது. ஒவ்வொரு ஆண்டின் டிசம்பர் திங்களில் நடைபெறும் முதலாவது குலுக்கலில் கிடைக்கும் நிகர விற்பனைத் தொகையின் ஆண்டுவாரியான விவரங்களையும், 1996–97ஆம் ஆண்டிலிருந்து 2003 சனவரியில் இத்திட்டம் முடிக்கப்பட்ட வரையில் தமிழ்நாடு முன்னாள் இராணுவ படைவீரர் நலநிதிக்கு மாற்றம் செய்யப்பட்ட தொகையையும் குழு கோருகிறது. (பத்தி எண்.10.3)

10. பதில் மழுப்பலாக உள்ளது என்பதுடன் திட்டவட்டமாக இல்லை என்றும் குழு அறிகிறது. தொகை கோரியது சரி என்பதையும், பரிசுத் தொகை உரிய நபருக்கு வழங்கப்பட்டது என்பதையும், இக்கோரிக்கைகளுக்கு ஆதரவாக நம்பத்தகுந்த ஆவணங்கள் பெறப்பட்டன என்பதையும் துறை உறுதி செய்யத் தவறியது என்று தணிக்கையில் தெரிவிக்கப்பட்டது. இதற்காக, துறை தற்போது அளித்த பதில், பொருத்தமாக இல்லை. இது குறித்த விளக்கத்தையும், திட்டவட்டமான பதிலையும் பெற குழு விரும்புகிறது. (பத்தி எண்.11.3)

11. இவ்வறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள அனைத்துப் பரிந்துரைகளின் மீதும் அரசு விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். காலக்கெடு குறிப்பிட்டுள்ள நேர்வுகளில் அதனைப் பின்பற்ற வேண்டும். காலக்கெடு குறிப்பிடாத நேர்வுகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து இறுதி அறிக்கை ஆறு மாதத்திற்குள் குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும். (பத்தி எண்.12.)

****